**திண்டிவனம் நகராட்சி**

**சாதாரண கூட்டம்**

## முன்னிலை:- திருமதி.ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.

31.08.2023 வியாழக்கிழமை **பிற்பகல் 05.00 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகர மன்ற சாதாரண கூட்டப் பொருள் விபரம்**

| பொருள். எண் | பொருள் விபரம் |
|---|---|
| 01) | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு-29ல் இந்திராகாந்தி பேருந்து நிலையத்திலிருந்து கிடங்கல்-1 , பூதேரி, செந்தமிழ் நகர் ஆகிய பகுதிகளுக்கு செல்லும் இந்திராகாந்தி பேருந்து நிலையம் அருகில் உள்ள தரை பாலம் 2021ம் ஆண்டு பெய்த பருவ மழை காரணமாக கிடங்கல் -1 ஏரி உபரி நீர் செல்லும் கால்வாயில் தரை பாலம் உடைப்பு ஏற்பட்டு அடித்து செல்லப்பட்டு, பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் சிரமமாக உள்ளது. எனவே இப்பாலத்தை புதியதாக கட்டுவதற்கு (Capital Grant Fund) மூலதன மானிய நிதி 2023 -2024 ன் கீழ் திட்ட மதிப்பீடு ரூ.1.00 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் தொழில்நுட்ப ஆய்வு செய்ய தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மண் பரிசோதனை (Soil Test), செய்து, வடிவமைப்பு (Structural Design) உடன் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்ய கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள இதற்கான செலவினத் தொகை திட்ட மதிப்பீட்டில் 2% வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி / CGF நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 4206/2021/இ1<br><br>**தீர்மானம் எண்:159.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**02)** இந்நகராட்சியில் **நாடாளுமன்ற உறுப்பினர் (மக்களவை) உள்ளூர் வளர்ச்சி திட்டம்–2022-2023**ன் கீழ் பின்வரும் பணிக்கு 09.08.2023ம் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **நாடாளுமன்ற உறுப்பினர் (மக்களவை) உள்ளூர் வளர்ச்சி திட்டம்–2022-2023** | | | | | | |
| 1 | **வார்டு-6, பசுவத்தம்மன் கோயில் தெரு, பள்ளிவாசல் முன் ரோசனையில் உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல் பணி.** | 2.50 | M/s Vee Light, 2, Mariamman Kovil Street, Pudupet, Attur, Salem(dt) -636141. | - | -0.01% | **M/s Vee Light,** |
| | | | M/s Veenus Enterprises No.106/A3, 1st Floor, Mandhaiveli Pakkam, Pudupet post, Attur TK, Salem Dt – 636141. | 0.02% | - | |
| 2 | **வார்டு22, கிடங்கல்-2, அம்பேத்கர் தண்ணீர் தொட்டி அருகில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல் பணி.** | 2.50 | M/s Vee Light, 2, Mariamman Kovil Street, Pudupet, Attur, Salem(dt) -636141. | - | -0.01% | **M/s Vee Light,** |
| | | | M/s Veenus Enterprises No.106/A3, 1st Floor, Mandhaiveli Pakkam, Pudupet post, Attur TK, Salem Dt – 636141. | 0.03% | - | |

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 7ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரிகளின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1141/2023/இ1

**தீர்மானம் எண்:160.**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 03) | திண்டிவனம் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் M/S கிரீன் அக்ரோ என்விரான்மென்ட் சர்வீசஸ், மதுராந்தகம் என்ற நிறுவனத்தின் மூலம் நவம்பர் 2022 முதல் டிசம்பர் 2022 வரை நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.398/- என்ற அடிப்படையில் 60 DBC பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள இந்நகர மன்ற தீர்மான எண் 167, நாள்.28.09.2022 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு, 30.04.2023 வரை ஒப்பந்தம் புதுபிக்கப்பட்டது. தற்போது மேற்படி ஒப்பந்த காலம் 30.04.2023-ல் முடிவடைந்துவிட்ட நிலையில் துணை இயக்குனர் , சுகாதாரப் பணிகள்,விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண்2791/அ4/2022 நாள்26.07.2023 யில் DBC பணியாளர்களை உடன் பணி அமாத்த தெரிவித்து இருப்பதால் வரும் **18.08.2023 முதல் 30.09.2023 முடிய 44 நாட்களுக்கு 30 DBC பணியாளர்கள்** மட்டும் பழைய விலைவிகித அடிப்படையில் ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும், அதற்கான மதிப்பீட்டு தொகை **ரூ6.00 இலட்சம்** பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. 18.08.2023 முதல் 30.09.2023 முடிய 44 நாட்களுக்கு மட்டும் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.6.00/- இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4144/2022/எச்1<br>**தீர்மானம் எண்:161.**<br>**நிராகரிக்கப்பட்டது.** |
| 04) | நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு புனித அந்தோணியர் சுயஉதவி குழு மூலம் நான்கு உறுப்பினர்கள் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் சுயஉதவி குழு தொடர்ந்து கழிவறைகளை சுத்தம் செய்யும் பணி மேற்கொண்டு வருவதையும் 2023-2024 ஆண்டிற்கான ஊதிய செலவினம் **ரூ.300000/– கல்வி நிதியில்** மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>பொது சுகாதாரப்பணி அவசியம் கருதி மேற்கண்ட புனித அந்தோணியர் சுயஉதவி குழு பணி மேற்கொண்டு வருவதையும் அதற்கான செலவினம் **ரூ.300000/–** கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2914/2015/எச்1<br>**தீர்மானம் எண்:162.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 05) | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 12091/2023/எம்ஏ2. நாள்.09.08.2023ல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 தொடர்பாக சென்னை கலைவாணர் அரங்கில் 22.06.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு நடைபெற்ற.இப்பயிலரங்கத்தில் மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள், மண்டல இயக்குநர்கள். செயற்பொறியாளர்கள் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் பங்கேற்ற பயிலரங்க்த்திற்கான கலைவாணர் அரங்கிற்கான கட்டணம் தொகை ரூ. 613600/- மற்றும் நிகழ்ச்சி ஏற்பாடு மற்றும் உணவு ஏற்பாடு செலவினம் ரூ.24,08,221.88/-ஆக மொத்தம் ரூ.30,21,821.88/- செலவிடப்பட்டதற்கான தேர்வு நிலை நகராட்சி பங்குத் தொகையாக ரூ.15000/- ஐ ECS முறையில் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே மேற்கண்ட செலவினத்தை ரூ. 15000/- ஐ அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் (Section 15) பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 2698/2023/சி1<br>**தீர்மானம் எண்: 163.**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| 06) | திண்டிவனம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு-027ல் ஆர்.எஸ். பிள்ளை தெரு மற்றும் ஹரிகிருஷ்ண திருமண மண்டபம் தெரு ஆகிய இடங்களில் கேபிள் பதித்தது, சிறுபாலம் அமைத்தது , குடிநீர் வடிகால்கள் அமைத்தது மற்றும் பாதாளச் சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்றது. மேலும் அப்பகுதிகளில் PVC பகிர்மான குடிநீர் குழாய்கள் 10 ஆண்டுகளுக்கு முன் பதிக்கப்பட்ட குழாய்கள் சேதமடைந்து சீரான குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதால். மேற்படி . புதியதாக PVC பகிர்மான குடிநீர் குழாய்கள் மாற்றி அமைத்திடவும் சீரான குடிநீர் விநியோகம் செய்திடவும், அதற்கான தோராய செலவின தொகை ரூ.2.00/-இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந. க. எண்:2772/2023/இ2<br>**தீர்மானம் எண்:164.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

07) திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான நீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்துவதற்கும், வளங்களை பெருக்குவதற்கும் (பூதேரி திறந்த கிணற்றில் இருந்து பூதேரி அகழி குளம் OTH's வரை பம்பிங் மெயின் வழங்குதல் மற்றும் 1.00 ,LL Sump உடன் போர்வெல்லை வழங்குதல், ஆகிய 2022-2023-ம் ஆண்டிற்கு விகித பகுப்பாய்வு மற்றும் மூலதன மானிய நிதி மற்றும் அளவுகளின் மதிப்பீட்டின் விலைபுள்ளியின் மூலம் பணிகள் மேற்கொள்ள 10.04.2023 வரை கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | பவித்ரா அசோஸியட்ஸ் சென்னை-600129 | டிசைன் ஸ்பெக்ட்ரம் சென்னை-70 | ப்ரோரேட்டா-இன்-ப்ர்ராபோஷன் சென்னை-89 |
|---|---|---|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான நீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்துவதற்கும். வளங்களை பெருக்குவதற்கும் (பூதேரி கிணற்றிலிருந்து பூதேரி மற்றும் அகழிகுளம் OHT's -2 No's ஆழ்துளை கிணறு 1.00 LL Sump ரெட்டணை தலைமை நிலையத்திலிருந்து வசந்தபுரம் மற்றும் தீர்த்தகுளம் OHTயில் பம்பிங் மெயின் இணைத்தல் பணிக்கு, விரிவான திட்ட மதிப்பீடு (DPR) தயர் செய்யும் பணி. | ரூ.280000/- | ரூ.300000/- | ரூ.330000/- |

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின்.மேற்கண்ட திட்டப்பணி பணியின் அவசர அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/sபவித்ர்ரா அசோஸியட்ஸ் சென்னை-600129, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற

| | |
|---|---|
| | தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந. க. எண்;1575/2023/இ2<br><br>**தீர்மானம் எண்:165.**<br><br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **08)** | திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தாமன காட்ராம்பாக்கம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் 250mm பிரதான நீரேற்று குழாய் திண்டிவனம்-பாண்டி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து கிளியனூர் செல்லும் சாலை சந்திப்பில் (Check Post ) செக்போஸ்ட் எதிரில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் வீநியோகம் தடைப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரி செய்வதற்கு நெடுஞ்சாலை துறை அனுமதி பெற்று பிரதான குழாய் உடைப்பை பைப் மாற்றி சரி செய்திடவும், அதற்கான தோராய செலவின தொகை ரூ.40,000/- (நாற்பதாயிரம் மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை நகராட்சி சட்டம் (Section 15) கீழ் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந. க. எண்;2773/2023/இ2<br><br>**தீர்மானம் எண்:166.**<br><br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **09)** | சொத்து வரி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் – 2023 ன் சட்ட பிரிவு :268-ன் படி 2023- 2024 ஆண்டிற்கான முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டிற்கான சொத்துவரி தொகையினை அரையாண்டின், முதல் மாதத்தில் செலுத்துவோருக்கு 5% ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்ற விபரத்தை பொது மக்கள் அறிந்திடும் வண்ணம் டிஜிட்டல் பேனர்கள் கொண்டு |

பொது மக்கள் அதிக அளவில் கூடும் இடத்தில் நிறுவிடவும் மற்றும் வரி வசூல் தொடர்பாக பேனர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து அனைத்து வரிவிதிப்புதாரர்களுக்கு வழங்கிடவும், சொத்து வரி தொடர்பாக நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் கட்டணங்கள் மைக்செட் விளம்பரம் மற்றும் பத்திரிக்கை விளம்பரம் மற்றும் வரி வசூல் தொடர்பாக ஏற்படும் இதர செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தோராய செலவினம் ரூ 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1229/2023/அ2

**தீர்மானம் எண்:167.**

**அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்)/– திருமதி.ஆர்.நிர்மலா.,**

**தலைவர்,**

**திண்டிவனம் நகர மன்றம்.**

// உண்மை நகல் //

**ஆணையாளர்,**

திண்டிவனம் நகராட்சி.